பொறுத்தும், பஞ்சாயத்து எல்லைக்குள் வாழும் மக்கள் நிலையைப் பொறுத்தும் இந்த எல்லைகளை மாற்றவோ பரப்பளவைக் குறைக்கவோ உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பஞ்சாயத்துக்களின் எல்லையை சட்டத்தின்படி பிரிப்பது அப்போதைக்கப்போது பரிசிலனை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டுவருகிறது.

Medical allowance for N.G.Os.

*95 Q.—Sri T. K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal to grant medical allowance to N.G.Os. in lieu of the free treatment in Government hospitals?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: No, Sir.

திரு. கே. மூக்கையா தேவர்: சார், இலவசமாக வைத்தியம் செய்கிற காரணத்தால் சரியான மருந்துகள் கொடுப்பதில்லை. கிடைத்தாலும் அந்த வியாதி போகும் அளவுக்கு விலை உயர்ந்த மருந்துகள் கொடுப்பதில்லை. ஆகவே, இந்த இலவச வைத்தியத்திற்குப் பதிலாக அவர்களுக்கு மருத்துவ அலவன்ஸ் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கனவே, இலவச மருத்துவ வசதி கொடுக்கும் காரணத்தால் அலவன்ஸ் கொடுப்பது இயலாது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், சிகிச்சைக்குப் பதிலாகப் பணம் கொடுப்பது ஒருபுறம் இருக்கட்டும். சிகிச்சை ஒழுங்காக நடக்க உத்தரவிடவேண்டும். விலை உயர்ந்த மருந்துகளை அனுமதிக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்பது உண்மையா? அப்படி உத்தரவு இருக்கிறது என்று நான் கூறுகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அரசாங்கத்திடம் அந்த மாதிரி தகவல் ஒன்றும் கிடையாது.

திரு. வை. சங்கரன்: ஒரு சில மருத்துவ மனைகளில் இலவசம் என்பதால் சரியான மருந்துகள் சிகிச்சைக்கு கிடைப்பதில்லை. ஆகவே, மத்திய சர்க்கார் போல், நம்முடைய அரசாங்கமும் ஏன் படி கொடுக்கக்கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: என்.ஜி.ஓ-க்களைத் தனியாகக் கவனிப்பதற்காக தக்க நடவடிக்கைகள் எல்லாம் எடுத்து ஆஸ்பத்திரிகளுக்கு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல என்று நினைக்கிறேன்.